மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. சி. ஞானசேகரன்.*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியைப்பற்றி நாங்கள் பல பேர் அவையிலே ஏற்கெனவே பேசி இருக்கிறோம். நேற்று ஒரு ஜி.ஓ. பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது; ஜி.ஓ. 26-ல்..*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஏற்கெனவே என்னுடைய அறையில் பேசிவிட்டீர்கள்; முடிந்தது அந்தப் பிரச்சினை. (குறுக்கீடு) அப்புறம் பேசுவோம்; உட்காருங்கள். திரு. பரிதி சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)*

திரு. சி. ஞானசேகரன்: *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதுபற்றி பதில் சொல்லட்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்வோம். திரு. பரிதி.*

(ஆ) கரூரில் தி.மு.க. இளைஞர் அணி உறுப்பினர் கோவிந்தராஜன் கொலை

திரு. பரிதி இளம்வழுதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 11 ஆம் தேதி கரூரில் அரசு காலனியில் எங்கள் கட்சியினுடைய இளைஞர் அணித் தோழர் கோவிந்தராஜன் அவர்கள் கொடூரமான முறையிலே கொலை செய்யப்பட்டு இருக்கிறார்..*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது என் ஆய்வில் இருக்கிறது. திரு. எ.வ. வேலு..*

(இ) விவசாயத் தொழிலாளர் நல வாரியம்

***திரு. எ.வ. வேலு**: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12-3-2002-அன்று விவசாயத் தொழிலாளர்கள் நல வாரியம் குறித்து விதி 55-ன்கீழ் கவன ஈர்ப்பு அறிவிப்பு.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது என் ஆய்வில் இருக்கிறது. திரு. வேல் முருகன்.*

(ஈ) பண்ருட்டி தொகுதியில் 54 உயிர்கள் பலியானது

திரு. தி. வேல் முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் 54 உயிர்கள் பலியாகி இருக்கின்றன. அது சம்பந்தமாக ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம்...*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2002 ஏப்ரல் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுவும் என்னுடைய ஆய்வில் இருக்கிறது. (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன்.

***திரு. துரைமுருகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் எ.வ. வேலு கேட்டதை, நானும் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆய்வில் இருக்கிறது; ஆய்வில் இருக்கிறது என்கிறீர்கள். தாங்கள் பெற்ற டாக்டர் பட்டத்திற்குக்கூட இவ்வளவு ஆய்வு செய்திருக்கமாட்டீர்கள் போல் இருக்கிறதே!

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன செய்வது? உங்களை எல்லாம் கட்டி ஆள வேண்டியிருக்கிறது. (சிரிப்பு)

3. கவன ஈர்ப்பு

(அ) புதுடெல்லியில் தேசிய நீர்க் கொள்கை குறித்து தேசிய நீர்வளக் குழு எடுத்த முடிவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. துரைமுருகன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர்களே, "1-4-2002 அன்று புது டெல்லியில் நடைபெற்ற தேசிய நீர்க் கொள்கை குறித்து தேசிய நீர்வளக் குழு எடுத்த முடிவு குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொருள் குறித்து அவைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

மத்திய அரசால் ஒரு தேசிய நீர்க் கொள்கை வகுக்கப்பட்டு 1987 ஆம் ஆண்டு தேசிய நீர் ஆதாரக் குழுமத்தால் விவாதிக்கப்பட்டு ஏற்றுக்